பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 08 2025 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1) ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் சட்ட மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

2) உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி இந்தியா விரைந்து முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3) நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை புதிய தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4) இலங்கையில் அரசு நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில், அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே கைது செய்யப்பட்டுள்ளார்.

5) உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தி
யா
ஆடவர் மற்றும் கலப்பு குழு பிரிவுகளில் இறுதியாட்டத்திற்கு முன்
னேறியுள்ளது

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<<>>>>>>

ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் சட்ட மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் இதற்கான சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது.

ஆன்லைன் விளையாட்டுகளுக்கென தனி ஆணையம் ஏற்படுத்தவும், பணம் வைத்து ஆன்லைன் விளையாட்டுகளை விளையாடுவதற்கு தடை செய்யும் அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை மற்றும் ஒரு கோடி ரூபாய் அபராதம் விதிக்க இந்த புதிய சட்டம் வகை செய்கிறது.

<<<<<<<<>>>>>>>

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி இந்தியா விரைந்து முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலத்திற்கு இன்று மாலை சென்ற பிரதமர், கொல்கத்தாவில் 5 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து பேசினார்.

கொல்கத்தா மற்றும் டம்-டம் ஆகிய நகரங்கள் விரைந்து வளர்ச்சி பெற்று வருவதாக அவர் கூறினார்.

2014-ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் 250 கிலோமீட்டர் தூரம் மட்டுமே ரயில் சேவை இருந்ததாகவும், தற்போது இது ஆயிரம் கிலோமீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பீகார் மாநிலம் கயாவில் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், இந்தியாவுக்குள் தீவிரவாதிகளை அனுப்பி,

தாக்குதல் நடத்த திட்டமிடுபவர்கள் எவரும் தப்பிக்க முடியாது என்று உறுதிபட தெரிவித்தார்.
நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கையில் ஆபரேஷன் சிந்தூர் புதிய பாதையை வகுத்துள்ளதாக அவர் கூறினார்.

தீவிரவாதிகள் இந்தியா மீது தாக்குதல் நடத்திவிட்டு, தரைக்கு அடியில் மறைந்திருந்தாலும் அவர்களை மண்ணுக்கு அடியிலேயே இந்திய ஏவுகணைகள் புதைத்துவிடும் என்றும் அவர் கூறினார்.

கயா -தில்லி இடையிலான அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை இந்நிகழ்ச்சியில் பிரதமர் தொடங்கிவைத்தார்.

இந்த ரயில் சேவை சுற்றுலாவுக்கும், புனித யாத்திரை செல்பவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ஊடுருவலை தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்த பிரதமர், பீகார் மாநிலத்தின் எல்லைப்பகுதி மாவட்டங்களில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நான்கு கோடிக்கும் மேற்பட்ட ஏழை எளிய குடும்பங்களுக்கு கான்கிரிட் வீடுகளை அமைத்து கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>>

தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் தமிழர்களின் நலனில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனி அக்கறை கொண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இன்று நெல்லையில் நடைபெற்ற குமரி மண்டலத்திற்கான பிஜேபி வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

திமுக ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

திமுக அரசுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளையும் அவர் பட்டியலிட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது அரசியல் கூட்டணி அல்ல என்றும், தமிழகத்தின் வளர்ச்சிக்கான கூட்டணி என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<<<>>>>>>

புதிய முயற்சிகள் மற்றும் நவீன கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பு பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ், பாதுகாப்புத்துறை உற்பத்தியில் உள்நாட்டு நிறுவனங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஐந்தாவது தலைமுறை போர் விமானங்களும் அதற்கான என்ஜின்களும் உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்திற்கு 97 தேஜாஸ் ரக போர் விமானங்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டிற்கு தேவையான பாதுகாப்பு தளவாட உற்பத்தித் துறையில் வெளிநாட்டு நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்புத்துறையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக IDX என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெரிய அளவிலான பாதுகாப்பு உற்பத்தித் திட்டங்களில் ஈடுபட தனியார் துறையினரை ஊக்குவிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள். பீரங்கிகள், நீர்முழ்கிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் பாதுகாப்புத்துறைக்கான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வரும் நாட்களில் உலக அளவில் முக்கிய இடத்தை பிடிக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

இலங்கையில் அரசு நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில், அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2023-ஆம் ஆண்டு திரு ரணில் விக்ரமசிங்கேவும், அவரது மனைவியும் சொந்த பணிக்காக லண்டன் பயணம் மேற்கொண்டதில் அரசின் நிதி 50 ஆயிரம் டாலர் அளவிற்கு முறைகேடாக பயன்பட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த ஓராண்டுக்கு முன் இலங்கையின் புலனாய்வுப்பிரிவு மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

திரு ரணில் விக்ரமசிங்கே கொழும்புவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பின்னர் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

<<<<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேச எல்லைப்பகுதியில் அமைந்துள்ள Dulung வனப்பகுதியில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிவரை, முப்படையினரின் கூட்டு பயிற்சி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியின்போது, பீரங்கிகள், ராக்கெட் லாஞ்சர்கள், விமானப்படையின் குண்டுவீச்சு உள்ளிட்ட முக்கிய பயிற்சிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வனப்பகுதிக்கு அப்பகுதியை சேர்ந்த மக்கள் எவரும் செல்வதற்கு லஷ்மிபூர் மாவட்ட நிர்வாகமும், வனத்துறையும் தடை விதித்துள்ளது.

பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் எக்காரணம் கொண்டும் பொதுமக்கள் நுழையக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முப்படையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

புதுச்சேரியில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏணம் பகுதியில் கோதாவரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆற்றில் வினாடிக்கு 13 லட்சத்திற்கும் கூடுதலான தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, புதுச்சேரி பாசனத்துறை Dowleswaram பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிட்டனர்.

தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<<<<<<<<>>>>>>

கொலம்பியாவில் நடத்தப்பட்ட இருவேரு தாக்குதல்களில் 18பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட வாகனம், Cali பகுதியில் உள்ள கொலம்பியா விமானப்படை தளம் அருகே, வெடித்துச் சிதறியதில், ஆறு பேர் உயிரிழந்ததுடன், 71 பேர் காயமடைந்ததாக, கொலம்பியா அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று Amalfi நகரில் COCA பயிர்களை அழிக்கும் பணிக்காக அனுப்பப்பட்ட ஹெலிகாப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் 12 அதிகாரிகள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த கொலம்பிய அதிபர் திரு. Gustavo Petro, அரசுக்கு எதிரான முன்னாள் கிளர்ச்சிப் படையினர் தான் இதற்கு காரணம் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

தற்போதைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், இதில் ஈடுபட்டவர்கள், சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் கொலம்பியா அதிபர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் கலப்பு குழு பிரிவுகளில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கனடாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா,
18 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு குழு பிரிவில் ஸ்பெயினையும்,
21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் குழு பிரிவில் கொரியாவையும் வென்றது.

------------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று, இரண்டு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-
நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் Elavenil Valarivan தங்கப்பதக்கம் வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Harmehar Lally - Yashasvi Rathore இணை தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவுகளில் இந்தியாவுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 18 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

-----------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

பூட்டானின் திம்புவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் Pearl மற்றும் Bonifilia தலா ஒரு கோல் அடித்தனர்

---------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------

ஆஸ்திரேலியா ”ஏ” அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ”ஏ” அணி முதல் இன்னிங்சில் 299 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பிரிஸ்பெனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா ”ஏ” அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 158 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<<END>>>>>>